# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்

## அசல் வழக்கு எண்.90/2021

(CNR.No. TNTS08-000114-2021)

கிருஷ்ணம்மாள் ...வாதி

/எதிர்/

இராமர்தேவர் மற்றும் மூவர் ... பிரதிவாதிகள்

| | | |
|---|---|---|
| முத்திரைக்கட்டணச் சட்டப்பிரிவு | – | 25(b), 25(d), 25(d) |
| வழக்கின் தன்மை | – | விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம், விளம்புகை, விளம்புகை |
| வழக்கின் மதிப்பு | – | ரூ.61,607/– அதில் பாதி ரூ.30,803.50/– + ரூ.5000/– + ரூ.5000/– மொத்தம் ரூ.71,607/– |
| நீதிமன்ற முத்திரைக்கட்டணம் | – | ரூ.925/– + ரூ.150/– + ரூ.150/– மொத்தம் ரூ.1,225.00/– |

//உத்தரவுப்படி//

தலைமை எழுத்தர்

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
சங்கரன்கோவில்
2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 04 ஆம் நாள் வியாழக்கிழமை
**<u>அசல் வழக்கு எண்.90/2021</u>**
(CNR.No. TNTS08-000114-2021)

தென்காசி மாவட்டம், திருவேங்கடம் வட்டம், கலிங்கப்பட்டி மஜரா, மேலமரத்தோணி கிராமத்தில் ராமசாமி அவர்கள் மனைவி, இந்து, சுமார் 65 வயதுள்ள கிருஷ்ணம்மாள்

...வாதி

/எதிர்/

1. கேரளா மாநிலம், இடுக்கி மாவட்டம், பீர்மேடு வட்டம், வண்டிப்பெரியார் அஞ்சல், டைமுக் எஸ்டேட்டில் வசிக்கும் அழகப்பத்தேவர் குமாரர், இந்து, சுமார் 75 வயதுள்ள இராமர்தேவர்
2. தென்காசி மாவட்டம், திருவேங்கடம் வட்டம், கலிங்கப்பட்டி மஜரா, மேலமரத்தோணி நடுத்தெரு, கதவு எண்.6–35A1–ல் வசிக்கும் சுப்பையாத்தேவர் குமாரர், இந்து, சுமார் 55 வயதுள்ள S.காளிராஜ்
3. தென்காசி மாவட்டம், திருவேங்கடம் வட்டம், கலிங்கப்பட்டி மஜரா, மேலமரத்தோணி நடுத்தெரு, கதவு எண்.35A1–ல் வசித்து வரும் காளிராஜ் குமாரத்தியும், சங்கர் அவர்கள் மனைவியுமான, இந்து, சுமார் 25 வயதுள்ள தனலட்சுமி
4. தென்காசி மாவட்டம், திருவேங்கடம் வட்டம், கலிங்கப்பட்டி மஜரா, மேலமரத்தோணி நடுத்தெரு, கதவு எண்.35A1–ல் வசித்து வரும் காளிராஜ் குமாரத்தி, இந்து, சுமார் 23 வயதுள்ள கார்த்திஸ்வரி

... பிரதிவாதிகள்

வாதியால் இவ்வழக்கானது, தபசில் சொத்து வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யும்படிக்கும், அதனை தொடர்ந்து வாதி தபசில் சொத்தை அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, மேற்படியார்களின் வகையாட்களோ எவ்வித இடையூறும் செய்யாதிருக்கும் பொருட்டு ஒரு நிரந்தர ஏவுகட்டளை பிறப்பிக்கும்படிக்கும், 1ம் பிரதிவாதி பெயரிலான 23.04.1993 தேதிய கிரைய ஆவண எண்.67/1993 மற்றும் 2ம்

பிரதிவாதியால் 3, 4 பிரதிவாதிகளுக்கு பிறப்பித்துக் கொடுக்கப்பட்ட 22.10.2012 தேதிய கிரைய ஆவண எண்.3525/2012 செல்லத்தக்கது அல்ல மற்றும் இல்லா நிலையது என (Null and void) விளம்புகை செய்யக்கோரியும் மற்றும் வழக்கின் செலவுத் தொகை கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 21.04.2021 |
| வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் | : | 21.04.2021 |
| வழக்கு மூலம் | : | 10.09.1968, 03.05.1993, 2020ம் ஆண்டு ஏப்ரல், 09.11.2009, 23.04.1993, 22.10.2012 மேலமரத்தோணி கிராமத்தில் வைத்து உண்டாகிற்று. |
| வழக்கு மதிப்பு | : | ரூ.61,607/- அதில் பாதி ரூ.30,803.50/- + ரூ.5000/- + ரூ.5000/- மொத்தம் ரூ.71,607/- |
| நீதிமன்ற முத்திரை கட்டணம் | : | தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டண சட்டம் பிரிவு 25(b)ன் படி 'அ' பரிகாரத்திற்கு ரூ.925/-ம், பிரிவு 25(d)ன் படி 'ஆ' பரிகாரத்திற்கு ரூ.150/-ம், பிரிவு 25(d)ன் படி 'இ' பரிகாரத்திற்கு ரூ.150/-ம், மொத்தம் ரூ.1,225.00/- நீதிமன்ற முத்திரைக் கட்டணம் வாதியால் செலுத்தப்பட்டுள்ளது. |

நீதிமன்ற அதிகார வரம்பிற்காகவும், நீதிமன்ற முத்திரை கட்டணத்திற்காகவும், பரிகாரத்திற்காக வாதி தனது தாவாவை 'அ' பரிகாரத்திற்கு ரூ.61607/- ஆக மதித்து அதில் பாதி அதற்கு ரூ.30,803.50/-க்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டணம் சட்டப்பிரிவு 25(b)-ன் படி ரூ.925/-ம், 'ஆ' பரிகாரத்திற்கு ரூ.5000/- என மதித்து அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டணம் சட்டப்பிரிவு 25(d)-ன் படி ரூ.150/-ம், 'இ' பரிகாரத்திற்கு ரூ.5000/- என மதித்து அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டணம் சட்டப்பிரிவு 25(d)-ன் படி ரூ.150/-ம், ஆக மொத்தம் ரூ.1,225.00/- நீதிமன்ற முத்திரைக் கட்டணம் வாதியால் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது 13.03.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சண்முகையா அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.V.தேன்மொழி அவர்கள் ஆஜராகியும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரை, பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை மற்றும் இருதரப்பு சாட்சியம், வாதி தரப்பு சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாத உரைகள் ஆகியவைகளை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>**தீர்ப்பாணை**</u>

| | |
|---|---|
| 1. | இவ்வழக்கானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு ஆணையிடப்படுகிறது. |
| 2. | வழக்கு தபசில் சொத்து வாதிக்கு மட்டும் தனித்துப் பாத்தியப்பட்டதென பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை செய்யப்பட்டு ஆணையிடப்படுகிறது. |
| 3. | தபசில் சொத்தினை வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ, வேலையாட்களோ அல்லது வாரிசுகளோ யாதொரு வகையிலும், எவ்வித இடையூறுகளும் செய்யக்கூடாதென மேற்படியார்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஆணையிடப்படுகிறது. |
| 4. | 23.04.1993 தேதியிட்ட ராமசாமி என்பவர் 1ம் பிரதிவாதிக்கு பிறப்பித்துக் கொடுத்த கிரைய ஆவணம் வழக்கு தபசில் சொத்தை பொறுத்தமட்டில் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல மற்றும் இல்லாநிலையது (Null and Void) என விளம்புகை செய்யப்பட்டு ஆணையிடப்படுகிறது. |
| 5. | 22.10.2012 தேதியிட்ட 2ம் பிரதிவாதி 3, 4 பிரதிவாதிகளுக்கு பிறப்பித்துக் கொடுத்த கிரைய ஆவணம் வழக்கு தபசில் சொத்தை பொறுத்தமட்டில் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல மற்றும் இல்லாநிலையது (Null and Void) என விளம்புகை செய்யப்பட்டு ஆணையிடப்படுகிறது. |

| | |
|---|---|
| 6. | பிரதிவாதிகள் வாதிக்கு வழக்கின் செலவுதொகையாக **ரூ.7,435.00/–** செலுத்த வேண்டுமென்று ஆணையிடப்படுகிறது. |

2026ம் ஆண்டு ஜீன் மாதம் 04ம் நாளாகிய இன்று என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இதனடியில் வைக்கப்பட்டது.

(Sd/-M. Alima)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**செலவுதொகை விபரம்**

| வாதி தரப்பு | | பிரதிவாதி தரப்பு |
|---|---|---|
| நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | ரூ. 1225.00/– | (தாக்கல் செய்யப்படவில்லை) |
| வக்காலத்து ஸ்டாம்பு | ரூ. 10.00/– | |
| முதுநிலை வழக்கறிஞர் பீஸ் | ரூ.4650.00/– | |
| இளநிலை வழக்கறிஞர் பீஸ் | ரூ.1550.00/– | |
| ஆக மொத்தம் | ரூ.7,435.00/– | |

**தபசில்**

1. திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, கரிவலம்வந்தநல்லூர் சப்டி சரகம் கலிங்கப்பட்டி அயன் புஞ்சைக்கு சர்வே 1261 நிர் ஏக்கர் 1 செண்ட் 37ல் தென்வடல் தார் 3ல் மேலக்கடைசித்தார் 1க்கு செண்ட் 45 3/4ல் கிழமேல் தார் 3ல் தெற்கு கடயதார் 1க்கு செண்ட் 15 1/4 இதற்கு மால்

| | |
|---|---|
| கோமதி தேவர் புஞ்சைக்கும் | கிழக்கு |
| காளியப்பத்தேவர் பாக புஞ்சைக்கும் | தெற்கு |
| ஆவுடையப்ப புஞ்சைக்கும் | மேற்கு |
| கணபதி தேவர் பாக புஞ்சைக்கும் | வடக்கு |

இம்மாலுக்குள்பட்டது.

2. ஷை கிராமம், ஷை சர்வே எண், செண்ட் 45 3/4 கிழமேல் தார் 3ல் வடகடைசி தார் 1க்கு செண்ட் 15 1/4 இதற்கு மால்

| | |
|---|---|
| பலவேசக்கோனார் புஞ்சைக்கும் | கிழக்கு |
| இதன் 3 லக்க புஞ்சைக்கும் | தெற்கு |
| ஆவுடையப்பத்தேவர் புஞ்சைக்கும் | மேற்கு |
| காளியப்ப பாக புஞ்சைக்கும் | வடக்கு |

இம்மாலுக்குட்பட்டது.

3. ஷை கிராமம், ஷை சர்வே எண்.1262, செண்ட் 88 ல் தென்வடல் தார் 3 ல் மேல்கடைய தார் 1 க்கு செண்ட் 29 1/4 ல் கிழமேல் தார் 3 ல் தெற்கு கடைய தார் 1 க்கு செண்ட் 9 3/4 இதற்கு மால்

| | |
|---|---|
| மேலே கண்ட 2 லக்க சொத்திற்கு | வடக்கு |
| பலவேசக்கோனார் புஞ்சைக்கும் | கிழக்கு |
| காளியப்பத்தேவர் புஞ்சைக்கும் | தெற்கு |
| ஆவுடையப்பத்தேவர் புஞ்சைக்கும் | மேற்கு |

இம்மாலுக்குட்பட்டது.

4. ஷை கிராமம், ஷை புல எண்ணில் செண்ட் 29 1/4 ல் கிழமேல் தார் 3 ல் வடகடைசி தார் 1 க்கு செண்ட் 9 3/4 இதற்கு மால்

| | |
|---|---|
| பலவேசக்கோனார் புஞ்சைக்கும் | கிழக்கு |
| சித்திரக்குடும்பன் புஞ்சைக்கும் | தெற்கு |
| ஆவுடையப்பத்தேவர் புஞ்சைக்கும் | மேற்கு |
| காளியப்பத்தேவர் புஞ்சைக்கும் | வடக்கு |

இம்மாலுக்குட்பட்டது.

மேலும் புல எண்.1261 ல் உள்ள தூர்ந்து போன கிணறு, ஜலம், பத்தல்நடை, கமலைத்தடம், வாய்க்கால் வழிநடைபாதை வகையறாக்களில் 3 ல் 1ல் 3 ல் 2 பங்கு பாத்தியமும் தபசில் சரி.

தபசில் சொத்திற்கு அரசு வழிகாட்டி மதிப்பு 1 செண்டுக்கு ரூ.1,232.13 க்கு ஆக மதித்து 50 X 1232.13 = 61,606.50 இருந்தபோதும் சந்தை மதிப்பு ரூ.61,606.50/– ஆக மதிக்கிறார்.

(Sd/-M. Alima)

S.T. H.C PDM, Sankarankovil

**<u>தீர்ப்பாணை</u>**
அசல் வழக்கு எண்.90/2021
நாள் : 04.06.2026
மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்.